சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடைபெறும் இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளது—

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	9—3—84 நண்பகல் 12 மணி
வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல்	9—3—84 பிற்பகல் 1 மணி
வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும்	12—3—84 நண்பகல் 12 மணி
தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும்	பின்னர் அறிவிக்கப்படும்

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(3) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு.

2. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

(4) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

1. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984)

2. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984).

3. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984).

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1984 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

(முற்பகல் 10-10)

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு புதுக்கோட்டை மார்க்கெட் கமிட்டி உறுப்பினர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு நீட்டிப்பதற்கும், மாநிலத்திலுள்ள மார்க்கெட் கமிட்டிகளின் ஸ்பெஷல் ஆபிசர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டு நீட்டிப்பதற்கும் வழிவகை செய்கிறது. இதில் ஒரு கிளாசில் 'வேலிடேஷன்' என்று

@ 298-300 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.